**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சேந்தமங்கலம்.**

**முன்னிலை: சீ. ராஜ குமாரன் B.E. L.L.B.,**

**குற்றவியல் நீதித்துறை நடுவர், சேந்தமங்கலம்.**

**2026–ஆம் ஆண்டு மே மாதம் 26–ஆம் நாள் செவ்வாய்கிழமை**

**2057 வது திருவள்ளுவர் ஆண்டு, பராபவ ஆண்டு, வைகாசி மாதம் 12ம் நாள்**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்: 16/2026**

**(CNR.No. TNNM-14-000016-2026)**

அரசுக்காக

காவல் ஆய்வாளர்,

சேந்தமங்கலம் காவல் நிலையம் – குற்ற முறையீட்டாளர்

(குற்ற எண். 204/2025)

எதிர்

ருக்மணி, க/பெ. கருப்பண்ணன்,

1/228, கணபதி நகர், அக்கியம்பட்டி,

சேந்தமங்கலம் வட்டம், நாமக்கல். – எதிரி

**( மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற R.O.C No. 814/2020/RG/F1. தேதி: 07.04.2021 உத்தரவு படி)**

| | | | |
|---|---|---|---|
| 1. | சம்பவ நாள் | 03.09.2025 | |
| 2. | புகார் நாள் (குற்ற அறிக்கை தாக்கலான நாள்) | 21.05.2026 | |
| 3. | எதிரி கைது செய்யப்பட்டு | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | 20.12.2025 | 20.12.2025 |

<table>
<tr><td></td><td>பிணையில் சென்ற நாள்</td><td></td></tr>
<tr><td>4.</td><td>குற்றம் சாட்டப்பட்டவர் மீதான குற்றச்சாட்டு</td><td>எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS –ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனையப்பபட்டன.</td></tr>
<tr><td>5.</td><td>BNSS பிரிவு 263(2) ன் கீழான கேள்வி</td><td>01.04.2026</td></tr>
<tr><td>6.</td><td>எதிரியின் பதில்</td><td>பொய் வழக்கு</td></tr>
<tr><td>7.</td><td>வழக்கின் விசாரணை தொடங்கிய நாள்</td><td>05.05.2026</td></tr>
<tr><td>8.</td><td>சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்</td><td>
<table>
<tr><th>அரசு தரப்பு சாட்சிகள்</th><th>சாட்சிகளின் பெயர்</th><th>முதல் விசாரணை</th><th>குறுக்கு விசாரணை</th></tr>
<tr><td>அ.சா.1</td><td>ருக்மணி</td><td>05.05.2026</td><td>05.05.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>செல்வி</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>ராம்குமார்</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.4</td><td>செல்வகுமார்</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.5</td><td>உமாதேவி</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>அ.சா.6</td><td>சுமதி</td><td>21.05.2026</td><td>21.05.2026</td></tr>
<tr><td>அ.சா.7</td><td>திருநாவுக்கரசு</td><td>22.05.2026</td><td>22.05.2026</td></tr>
</table>
</td></tr>
<tr><td>9.</td><td>வழக்கின் விசாரணை முடிவுற்ற நாள்</td><td>22.05.2026</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 10. | BNSS பிரிவு 351(1)(ஆ) ன் கீழான கேள்வி | 25.05.2026 |
| 11. | தீர்ப்புரை பகரப்பட்ட நாள் | 26.05.2026 |
| 12. | தீர்ப்பு | முடிவாக, எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. |
| 13. | குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு தீர்ப்பின் நகல் வழங்கப்பட்ட நாள் | – |
| 14. | காலதாமதத்திற்கான காரணம் | இல்லை. |

******

இந்த வழக்கானது 03.01.2026–ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசுதரப்பில் திருமதி. உதயாபானு., அரசு உதவி வழக்கறிஞர் நிலை –2 அவர்கள் முன்னிலையாகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. K. கமலகண்ணன், அவர்கள் முன்னிலையாகியும், 25.05.2026–ஆம் தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்த போது , இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், வழக்கின் சாட்சி

மற்றும் வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும்...

**<u>தீர்ப்புரை</u>**

**1)** அரசு தரப்பு வழக்கு யாதெனில், புகார்தாரர் ருக்மணி என்பவரின் கணவர் மணி என்பவர் 03.09.2025ம் தேதி அதிகாலை சுமார் 05.30 மணியளவில் அக்கியம்பட்டி டு வடுகப்ட்டி ரோட்டில் உள்ள டீ கடையில் டீ குடிக்க கண்ணம்மா என்பவரின் வீட்டின் அருகில் நடந்து வந்து கொண்டிருந்த போது அவருக்கு பின்னால் அதே திசையில் வந்த அக்கியம்பட்டி ANC சேம்பருக்கு வழக்கமாக டீ எடுத்து செல்லும் TN 28 BF 8841 என்ற எண்ணுள்ள TVS Scooty Pep+ வண்டியை ஓட்டி வந்த எதிரி ருக்மணி என்பவர் பொது பாதையில் மனித உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதத்தில் அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்து நடந்து சென்ற மணி என்பவரின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாகவும், மேற்படி அதே தேதி அதே நேரம் அதே இடத்தில் மேற்படி சம்பவத்தின் தொடர்ச்சியாக புகார்தாரரின் கணவர் மணி என்பவருக்கு சாலை விபத்தில் மரணத்தை விளைவித்ததாகவும், நிகழ் நிலை புகார் தராரான ருக்மணி கொடுத்த புகாரின் பேரில் சேந்தமங்கலம் காவல் நிலைய குற்ற எண் 204/2025 ல் எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) of BNS –ல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு விசாரணை முடிக்கப்பட்டு எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

**2)** இவ்வழக்கின் இறுதி அறிக்கை மற்றும் பிற ஆவணங்களின் பரிசீலனை செய்ததில் எதிரி மீது முதல் நிலை வழக்கு இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இந்த வழக்கினை ஆண்டு பட்டிகை வழக்கு எண் 16/2026 ன் கீழ் கோப்புக்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பானை

அனுப்பப்பட்டது. மேற்படி அழைப்பாணையின் பேரில் எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன், அரசு தரப்பு வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும், BNSS 230–வது பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

**3)** வழக்கு ஆவணங்களின் நகல்களை எதிரி படித்துப் பார்க்கப் போதுமான கால அவகாசம் வழங்கப்பட்டும், BNSS 193–ன் கீழ் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை பரிசீலித்து, எதிரி மீது சொல்லப்பட்டுள்ள குற்றம் குறித்து எடுத்துரைக்கப் போதுமான ஆதாரங்கள் உள்ளது என்று இந்நீதிமன்றம் கருதியதால், எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழும் குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு குற்றச்சாட்டுகள் பற்றி எதிரியிடம் வினவிய போது, எதிரி குற்றச் சாட்டுகளை மறுத்து, குற்றவாளி இல்லை என்றார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**4)** எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, அரசு தரப்பில் **அ.சா.1** முதல் **அ.சா.7** வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, **அ.சா.ஆ.1** முதல் **அ.சா.ஆ.7** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டன.

<u>5). அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம்:–</u>

**5.1. அ.சா.1 குமரவேல் தனது சாட்சியத்தில்,** கடந்த 03.09.2025ம் தேதி காலை சுமார் 05.30 மணிக்கு எனது கணவர் மணி டீ குடிக்க அக்கியம்பட்டியில் உள்ள டீ கடைக்கு டீ குடிப்பதற்காக சென்றதாகவும், சிறிது நேரத்தில் தனது உறவினர் ஒருவர் எனது வீட்டிற்கு வந்து தனது கணவருக்கு அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி செல்லும் ரோட்டில்

கண்ணம்மா வீட்டின் அருகே எதிரி அதிவேகமாக ஸ்கூட்டியை ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தியதாக தகவல் கூறியதாகவும், தான் அங்கு சென்று பார்த்தபோது எனது கணவருக்கு கழுத்து மற்றும் தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் தனது கணவரை நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு பரிசோதித்து பார்த்துவிட்டு தனது கணவர் இறந்துவிட்டதாக கூறியதாகவும், இது சம்மந்தமாக தான் சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், புகார் மனுவில் உள்ள கைரேகை தன்னுடையது தான் என்றும், பின்பு பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.1 ன் மூலம் புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.2. அ.சா.2 செல்வி தனது சாட்சியத்தில்,** தேதி நினைவில் இல்லை என்றும், கடந்த வருடம் 9 வது மாதத்தில் ஒரு நாள் காலை சுமார் 06.00 மணியளவில் தான் வீட்டில் இருந்தபோது தனது அப்பா மணிக்கு எல்லிபாளையம் போயர் தெருவில் சாலைவிபத்து ஏற்பட்டதாகவும், பின்னர் அவரை நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் தகவல் வந்ததாகவும், தான் உடனே நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று தனது அம்மாவிடம் விசாரித்தபோது அன்றைய தினம் 05.15 மணியளவில் வீட்டில் இருந்து கிழம்பி டீ கடைக்கு செல்வதற்காக அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக சென்றுகொண்டிருந்தபோது அதே திசையில் TN 28 BF 8841 பதிவெண்கொண்ட ஸ்கூட்டி வண்டியில் வந்த எதிரி தனது அப்பாவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறியதாகவும், தனது அப்பாவிற்கு கழுத்து, தலை, வாய் ஆகிய இடங்களில் பலத்த காயம்

ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னதாகவும், போலிசார் மருத்துவ மனையில் பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.3. அ.சா.3 ராம்குமார் தனது சாட்சியத்தில்,** தான் கடந்த 09.03.2025ம் வருடம் கரூரில் உள்ள கல்குவாரியில் வேலைசெய்து கொண்டிருந்தபோது காலை சுமார் 05.40 மணிக்கு தனது அப்பாவிற்கு 05.30 மணிக்கு எல்லிபாளையம் போயர் தெருவில் சாலைவிபத்து ஏற்பட்டதாகவும், பின்னர் அவரை நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்திருப்பதாகவும் தகவல் வந்ததாகவும், தான் உடனே நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு சென்று தனது அம்மாவிடம் விசாரித்த போது அன்றைய தினம் 05.15 மணியளவில் வீட்டில் இருந்து கிழம்பி டீ கடைக்கு செல்வதற்காக அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் வடக்கில் இருந்து தெற்காக சென்றுகொண்டிருந்தபோது அதே திசையில் TN 28 BF 8841 பதிவெண்கொண்ட ஸ்கூட்டி வண்டியில் வந்த எதிரி தனது அப்பாவின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தியதாக கூறியதாகவும், தனது அப்பாவிற்கு கழுத்து, தலை, வாய் ஆகிய இடங்களில் பலத்த காயம் ஏற்பட்டு இறந்துவிட்டதாக சொன்னதாகவும், போலிசார் மருத்துவமனையில் பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.4. அ.சா.4 செல்வகுமார் தனது சாட்சியத்தில்,** தேதி நினைவில் இல்லை என்றும், அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் பேருந்து நிறுத்தத்தை தாண்டி தான் நின்று கொண்டிருந்தபோது போலிசார் அங்கு

நடந்த சாலை விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்ததாகவும், போலிசார் அங்கு படம் வரைந்து எழுதிக்கொண்டு தன்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4 ன் மூலம் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டது.

**5.5. அ.சா.5 உமாதேவி தனது சாட்சியத்தில்,** தேதி நினைவில் இல்லை என்றும், அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் முத்து விநாயகம் ஆலோபிரிக்ஸ்க்கு அருகில் தான் நின்று கொண்டிருந்தபோது போலிசார் அங்கு நடந்த சாலை விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்ததாகவும், போலிசார் அங்கு படம் வரைந்து எழுதிக்கொண்டு தன்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.6. அ.சா.6 சுமதி தனது சாட்சியத்தில்,** தேதி நினைவில் இல்லை என்றும், சுமார் 9 மாதங்களுக்கு முன்னர் சுமார் காலை 05.30 மணிக்கு தான் தனது கடைக்கு வந்தபோது கண்ணம்மா வீட்டின் அருகே இவ்வழக்கில் இறந்துபோன மணி என்பவர் சாலையின் ஓரத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிரி ருக்மணி அவரது நீலநிற ஸ்கூட்டியை ஓட்டிவந்து மணியின் மீது மோதியதாகவும், விபத்தில் மணிக்கு தலை மற்றும் கழுத்தில் அடிபட்டிருந்ததாகவும், மணி சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாகவும்,

தாங்கள் மணியை தனியார் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் சாட்சியமளித்துள்ளார்.

**5.7. அ.சா.7 திருநாவுக்கரசு தனது சாட்சியத்தில்,** கடந்த 03.09.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாதி ருக்மணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.204/2025, BNS 281, 106 பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் திரு. கோவிந்தராசன் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கை தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் 03.09.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடமான அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் கண்ணம்மா என்பவரின் வீட்டின் அருகே சென்று சாட்சிகள் செல்வகுமார், உமாதேவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று விபத்தில் இறந்து போன மணி பிரேதத்தின் மீது சவகிடங்கு முன்பு வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 09.30 மணி முதல் 11.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டதாகவும், இறப்பின் காரணம் அறியும் பொருட்டு மணி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்து ஆய்வறிக்கை வழங்கும்படி பணி மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம்

கொடுத்து பிரேதத்தை பெண் தலைமை காவலர் திருமதி.கொழுந்தரசி மூலம் பிரேதத்தை ஒப்படைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் ருக்மணி, செல்வி, ராம்குமார், முருகேசன், கீதா, செல்வகுமார், உமாதேவி, சசிக்குமார், சூர்யா, சுமதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 15.09.2025ம் தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 28 BF 8841 பதிவெண் கொண்ட வாகனத்தை மோ.வா.ஆய்வாளர்க்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்ததாகவும், 20.12.2025ந் தேதி காலை 09.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி ருக்மணியை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்ததாகவும், அன்றைய தினமே மோ.வா.ஆய்வாளர் திரு.செந்தில் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோ.வா.ஆ.அறிக்கை பெற்றதாகவும், பின்னர் அன்றைய தினமே மணிக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு.குமரவேல் மற்றும் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு.ரகுதீபன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றதாகவும், அன்றைய தினமே பெண் தலைமை காவலர் திருமதி. கொழுந்தரசி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது BNS 281, 106 பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது.

6) இவ்வழக்கில், அரசு தரப்பு சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக தோன்றும் சாட்சிகளின் சாட்சியம் குறித்து, எதிரியிடம் BNSS 351(1) (ஆ)–ன் படி எடுத்துரைக்க, எதிரி பொய் சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை எனக் கூறியதன்பேரில், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. இரு தரப்பும் கேட்கப்பட்டது.

7) இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

8) அரசு தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் பொருட்டு அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளதாகவும், அ.சா.ஆ1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு வழக்கை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு, நிரூபித்துள்ளதாகவும், எனவே எதிரிக்கு உரிய தண்டனை வழங்குமாறு வாதிடப்பட்டது.

9) எதிரி தரப்பில் வாதிட்ட வழக்கறிஞர் இவ்வழக்கில் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றும், வாதி தொடுத்த பொய்யான புகாரின் மீது சரியான புலன் விசாரணை செய்யாமல் போலீசார் எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் அரசு தரப்பு வழக்கு சந்தேகத்துடன் அமைந்துள்ளது என்றும், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை எனவும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை வழக்கு குற்றச்சாட்டுகளில் இருந்து விடுதலை செய்யவேண்டுமென வாதிட்டார்.

10) தீர்வு:

**10.1.** இந்த வழக்கில் எதிரி மீது சுமத்தப்பட்ட பிரிவுகள் 281, 106(1) of BNS ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் நிரூபிக்க மேற்கண்ட குற்றச்சாட்டுகளின் மிக அத்தியாவசியமான பொருண்மையான எதிரி தனது வாகனத்தை அஜாக்கிரதையாகவும் அல்லது அதிவேகமாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை அரசு தரப்பில் நிரூபிக்க வேண்டியது அவசியமாகும்.

**10.2.** இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 ருக்மணி தனது முதல் விசாரணையில், கடந்த 03.09.2025ம் தேதி காலை சுமார் 05.30 மணிக்கு எனது கணவர் மணி டீ குடிக்க அக்கியம்பட்டியில் உள்ள டீ கடைக்கு டீ குடிப்பதற்காக சென்றதாகவும், சிறிது நேரத்தில் தனது உறவினர் ஒருவர் எனது வீட்டிற்கு வந்து தனது கணவருக்கு அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி செல்லும் ரோட்டில் கண்ணம்மா வீட்டின் அருகே எதிரி அதிவேகமாக ஸ்கூட்டியை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியதாக தகவல் கூறியதாகவும், தான் அங்கு சென்று பார்த்தபோது எனது கணவருக்கு கழுத்து மற்றும் தலையில் பலத்த இரத்த காயம் ஏற்பட்டிருந்ததாகவும், பின்னர் தனது கணவரை நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம் அங்கு பரிசோதித்து பார்த்து விட்டு தனது கணவர் இறந்துவிட்டதாக கூறியதாகவும், இது சம்மந்தமாக தான் சேந்தமங்கலம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும், புகார் மனுவில் உள்ள கைரேகை தன்னுடையதுதான் என்றும், பின்பு பிரேத விசாரணை, பிரேத பரிசோதனை முடித்து பிரேதத்தை தங்களிடம் ஒப்படைத்ததாகவும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.1 ன் சாட்சியத்தை கவனமாக ஆராயும் போது அவர் சம்பவம் குறித்து தகவல் கேள்விப்பட்டு தான் புகார் கொடுத்துள்ளார் என்பது தெரியவருகிறது.

**10.2.** இவ்வழக்கில் அ.சா.2 செல்வி அ.சா.3 ராம்குமார் ஆகியோரின் சாட்சியத்தை கவனமாக ஆராயும் போது, மேற்படி சாட்சிகள் கேள்வி நிலை சாட்சிகள் என்பது தெரியவருகிறது.

**10.3.** இந்திய சாட்சிய சட்டம் பிரிவு **60** ன் கீழ் வாய்மொழி சாட்சியமானது நேரடி சாட்சியமாகவே இருத்தல் வேண்டும். எனவே, அ.சா.1 வாதி ருக்மணி, அ.சா.2 செல்வி மற்றும் அ.சா.3 ராம்குமார் ஆகியோர் சம்பவம் குறித்து கேள்வி நிலை சாட்சியம் என்பதால் அவர்களது சாட்சியத்தை கருத்தில் கொள்ள இயலாது.

**10.4.** இவ்வழக்கில் அ.சா.6 தனது சாட்சியத்தில்

> "தேதி நினைவில் இல்லை. சுமார் 9 மாதங்களுக்கு முன்னர் சுமார் காலை 05.30 மணிக்கு நான் எனது கடைக்கு வந்த போது கண்ணம்மா வீட்டின் அருகே இவ்வழக்கில் இறந்து போன மணி என்பவர் சாலையின் ஓரத்தில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி நடந்து சென்றுகொண்டிருந்தபோது எதிரி ருக்மணி அவரது நீலநிற ஸ்கூட்டியை ஓட்டிவந்து மணியின் மீது மோதினார்.

என சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.6 ன் சாட்சியத்தை கவனமாக ஆராயும் போது அவர் எதிரி மணிகண்டன் மீது வாகனத்தின் மோதினார் என்பதை குறிப்பிட்டு சாட்சியமளித்துள்ளாரே தவிர, எதிரி தனது வானத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என குறிப்பிட்டு சாட்சியமளிக்கவில்லை. எனவே, அ.சா.6 ன் சாட்சியத்தை மட்டுமே வைத்துக்கொண்டு எதிரியின் மீதான குற்றச்சாட்டானது நிரூபிக்கப்பட்டதாக முடிவு செய்ய இயலாது.

**10.5.** இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ள செல்வகுமார் தனது சாட்சியத்தில், தேதி நினைவில் இல்லை என்றும், அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் பேருந்து நிறுத்தத்தை தாண்டி தான் நின்று கொண்டிருந்தபோது போலிசார் அங்கு

நடந்த சாலை விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்ததாகவும், போலிசார் அங்கு படம் வரைந்து எழுதிக்கொண்டு தன்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும், அ.சா.4 செல்வகுமார் மூலம் பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**10.6.** இவ்வழக்கில் மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டுள்ள உமாதேவி தனது சாட்சியத்தில், தேதி நினைவில் இல்லை என்றும், அக்கியம்பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் முத்து விநாயகம் ஆலோபிரிக்ஸ்க்கு அருகில் தான் நின்று கொண்டிருந்தபோது போலிசார் அங்கு நடந்த சாலை விபத்து வழக்கு சம்மந்தமாக விசாரணை செய்ததாகவும், போலிசார் அங்கு படம் வரைந்து எழுதிக்கொண்டு தன்னிடம் சாட்சி கையொப்பம் பெற்றதாகவும், அ.சா.ஆ.2 பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், இது சம்மந்தமாக போலிசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேற்படி அ.சா.4 மற்றும் அ.சா.5 ன் சாட்சியத்திலிருந்து போலீசார் சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகளை விசாரணை செய்தார்கள் என்ற பொருண்மை நிரூபிக்கப்பட்டுள்ளது.

**10.7.** இவ்வழக்கில் அ.சா.7 ஆக விசாரிக்கப்பட்டுள்ள திருநாவுக்கரசு தனது விசாரணையில், கடந்த 03.09.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் சேந்தமங்கலம் காவல் நிலையத்தில் பொறுப்பு அலுவலில் இருந்தபோது வாதி ருக்மணி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண்.204/2025, BNS 281, 106 பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனுவை இணைத்து கனம் நீதித்துறை

நடுவர் அவர்களுக்கு அனுப்பியும் பிற நகல்களை உரிய அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக ஆய்வாளர் திரு. கோவிந்தராசன் அவர்களின் பார்வைக்கு வைத்ததாகவும், வழக்கை தன்னுடைய புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட ஆய்வாளர் 03.09.2025ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடமான அக்கியம் பட்டி டு வடுகப்பட்டி ரோட்டில் கண்ணம்மா என்பவரின் வீட்டின் அருகே சென்று சாட்சிகள் செல்வகுமார், உமாதேவி ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம், பார்வை மகஜர் தயார் செய்து அதில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றதாகவும், பின்னர் நாமக்கல் அரசு மருத்துவமனை சென்று விபத்தில் இறந்து போன மணி பிரேதத்தின் மீது சவகிடங்கு முன்பு வைத்து சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் காலை 09.30 மணி முதல் 11.30 மணி வரை பிரேத விசாரணை மேற்கொண்டதாகவும், இறப்பின் காரணம் அறியும் பொருட்டு மணி பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்து ஆய்வறிக்கை வழங்கும்படி பணி மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை பெண் தலைமை காவலர் திருமதி.கொழுந்தரசி மூலம் பிரேதத்தை ஒப்படைத்ததாகவும், பின்னர் சாட்சிகள் ருக்மணி, செல்வி, ராம்குமார், முருகேசன், கீதா, செல்வகுமார், உமாதேவி, சசிக்குமார், சூர்யா, சுமதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், 15.09.2025ம் தேதி விபத்தின் காரணம் அறியும் பொருட்டு விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 28 BF 8841 பதிவெண் கொண்ட வாகனத்தை மோ.வா.ஆய்வாளா்க்கு வேண்டுகோள் கடிதத்துடன் அனுப்பி வைத்ததாகவும், 20.12.2025ந் தேதி காலை 09.00 மணிக்கு நிலையத்தில் ஆஜரான எதிரி ருக்மணியை காரணம் கூறி கைது செய்து தக்க பிணையில் விடுவித்ததாகவும், அன்றைய தினமே மோ.வா.ஆய்வாளார் திரு.செந்தில் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோ.வா.–

ஆ.அறிக்கை பெற்றதாகவும், பின்னர் அன்றைய தினமே மணிக்கு சிகிச்சை வழங்கிய மருத்துவர் திரு.குமரவேல் மற்றும் பிரேத பரிசோதனை மேற்கொண்ட மருத்துவர் திரு.ரகுதீபன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றதாகவும், அன்றைய தினமே பெண் தலைமை காவலர் திருமதி. கொழுந்தரசி மற்றும் காவல் உதவி ஆய்வாளர் திரு.தமிழ்குமரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், இத்துடன் தனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது BNS 281, 106 பிரிவின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.7 ன் மூலம் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டது. மேற்படி அ.சா.7 சாட்சியத்தில் இருந்து புலன் விசாரணை முறையாக நடைபெற்றது என்பதை கூற முடியுமே தவிர எதிரி மீதான குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டதாக அறுதியிட்டு கூற இயலாது.

**11)** அரசு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்களை மிக கவனத்துடன் பரிசீலிக்கும் போது அரசு தரப்பில் எதிரியின் அஜாக்கிரதை அல்லது கவனக்குறைவை நிரூபிக்கவில்லை என்பது தெரியவருகிறது. எனவே, எதிரி மீது பிரிவுகள் 281, 106(1) of BNS–ன் கீழ் சாட்டப்பட்ட குற்றச்சாட்டுகளை அரசுதரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்–பட்டு நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12) முடிவாக,**

எதிரி மீதான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்காததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரி மீதான சட்டப்பிரிவுகள் 281, 106(1) of BNS ன்

கீழான குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரியை BNSS பிரிவு 271(1) ன் கீழ் விடுதலை செய்து உத்தரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்துகள் எதுவும் கைப்பற்றப்பட்டு இந்நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படவில்லை. எனவே, வழக்கு சொத்துகள் குறித்து உத்தரவு இல்லை. எதிரி எழுதி கொடுத்த பிணைய பத்திரங்கள் இவ்வழக்கு மேல் முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு தானாக ரத்தாகி விடும் என உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்பானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து –தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று **2026–ஆம் ஆண்டு மே மாதம் 26–ஆம் நாள் செவ்வாய்கிழமை** ஆகிய இன்று திறந்த இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:29:42 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**<u>அரசு தரப்பு சாட்சிகள்–</u>**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.1 | ருக்மணி | புகார்தாரர் |
| 2 | அ.சா.2 | செல்வி | கேள்வி நிலை சாட்சி |
| 3 | அ.சா.3 | ராம்குமார் | கேள்வி நிலை சாட்சி |
| 4 | அ.சா.4 | செல்வகுமார் | பார்வை மகஜர் சாட்சி |
| 5 | அ.சா.5 | உமாதேவி | பார்வை மகஜர் சாட்சி |
| 6 | அ.சா.6 | சுமதி | கேள்விநிலை சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 7 | அ.சா.7 | திருநாவுக்கரசு | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்—**

| | | | |
|---|---|---|---|
| 1 | அ.சா.ஆ.1 | புகார் மனு | அ.சா.1 |
| 2 | அ.சா.ஆ.2 | பார்வை மகஜர் | அ.சா.4 |
| 3 | அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.7 |
| 4 | அ.சா.ஆ.4 | மாதிரி வரைபடம் | அ.சா.7 |
| 5 | அ.சா.ஆ.5 | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.7 |
| 6 | அ.சா.ஆ.6 | மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை | அ.சா.7 |
| 7 | அ.சா.ஆ.7 | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.7 |

**அரசுத் தரப்பு சான்று பொருள்—** இல்லை

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்**

இல்லை.

RAJAKUMARAN S
Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:29:49 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

**பின்குறிப்பு—**

1. எதிரி வழக்கு விசாரணையின்போது நீதிமன்றக் காவலில் இல்லை.
2. வழக்கின் முடிவு இருதரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டது.
3. எந்த சாட்சிகளும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

RAJAKUMARAN S
Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:29:54 +0530

நீதித்துறை நடுவர்,

சேந்தமங்கலம்.

<u>CASE SUMMARY</u>

**<u>CC-16/2026, Cr.No. 204/2025</u>**

(CNR.No. TNNM-14-000016-2026)

<u>SENDAMANGALAM POLICE STATION</u>

<table>
<tr><th>S.No</th><th>Particulars</th><th>Purpose</th></tr>
<tr><td>i</td><td>The period of remand of the accused</td><td>-</td></tr>
<tr><td>ii</td><td>The date of filing of the Complainant/Final report in the Court</td><td>21.05.2026</td></tr>
<tr><td>iii</td><td>The date of Committal of the case to the Court of Session</td><td>NIL</td></tr>
<tr><td>iv</td><td>The date of questioning of the accused as the case may be</td><td>01.04.2026</td></tr>
<tr><td>v</td><td>Filing of all miscellaneous petitions and their results including the results on challenge before superior Courts: except routine petitions like petitions under Section 355 of the BNSS</td><td>NIL</td></tr>
<tr><td>vi</td><td>Date of Examination in-chief and cross-examination of a witness</td><td><table>
<tr><td>Witness examined as</td><td>Date of Chief Examination</td><td>Date of Cross Examination</td></tr>
<tr><td>PW1-Rukmani</td><td>05.05.2026</td><td>05.05.2026</td></tr>
<tr><td>PW2-Selvi</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>PW3-Ramkumar</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>PW4-Selvakumar</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>PW5-Umadevi</td><td>14.05.2026</td><td>14.05.2026</td></tr>
<tr><td>PW6-Sumathi</td><td>21.05.2026</td><td>21.05.2026</td></tr>
<tr><td>PW7-Thirunavukarasu</td><td>22.05.2026</td><td>22.05.2026</td></tr>
</table></td></tr>
<tr><td>vii</td><td>Date of examination of the accused under section 351(1)(b) of the BNSS</td><td>25.05.2026</td></tr>
<tr><td>viii</td><td>Details of abscondence of an accused and his appearance/production, as the case may be;</td><td>NIL</td></tr>
<tr><td>ix</td><td>Grant of stay by superior Courts and the results thereof</td><td>NIL</td></tr>
</table>

RAJAKUMARAN S

Digitally signed by RAJAKUMARAN S
Date: 2026.05.26 10:30:00 +0530

Judicial Magistrate,
Sendamangalam.